2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

II. காவல் துறையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்துதல்

7. காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களின் குறைகளைக் கனிவோடு கேட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்காக, பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் மறைந்த காவலர்களின் வாரிசுகள் 1,132 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படும். இந்தப் பணிக்காக கணினிகள் மற்றும் மென்பொருட்கள் புதிதாகக் கொள்முதல் செய்யப்படும். இதற்கான மொத்த தொடராச் செலவினம் ரூபாய் 33 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. பொதுமக்களோடு தொடர்புகொள்ளும் திறனை மேம்படுத்த 1,20,000 காவல் ஆளிநர்களுக்கு ரூபாய் 10 கோடி செலவில் சென்னை அண்ணா மேலாண்மை மையத்தின்மூலம் பயிற்சி வழங்கப்படும்.

9. மீனவ இளைஞர்கள் இந்திய கடற்படையில் ஒப்பந்த அடிப்படையில் சேரும்விதமாக அவர்களுக்கு கடலோரக் காவல் படைக் குழுமம்மூலம் ரூபாய் 90 இலட்சம் செலவில் ஆறு மாதப் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சியின்மூலம் இவ்விளைஞர்கள் மற்ற இந்திய பாதுகாப்புப் படையில் சேரவும் வாய்ப்பு அதிகரிக்கும்.

10. கடலோரப் பாதுகாப்பு காவல் படையினருடன் இணைந்து பணிபுரிய 1,000 மீனவ இளைஞர்கள் ஊர்க்காவல் படையினராகப் பணியமர்த்தப்படுவர். இதற்கான மொத்த தொடர் செலவு ரூபாய் 3 கோடியே 40 இலட்சம் ஆகும்.

11. காவலர் – பொதுமக்களுக்கிடையேயான உறவை மேம்படுத்தவும், காவல் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் காவல் ஆணையம் ஒன்று மீண்டும் அமைக்கப்படும். புதிய காவல் ஆணையம் ஏற்படுத்தப்படும்.

12. சென்னை மாநகரில், மண்டல அளவில் நான்கு சைபர் குற்றக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும். இதற்கென மறு விநியோக (Redeployment) முறையில் தேவையான பணியாளர்கள் பயன்படுத்தப்படுவர்.